# பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

மதுரை சாலை, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல்.

## சர்வதேச மகளிர் தினவிழா 2024
## பற்றிய அறிக்கை

**நாள் : 08.03.2024** **இடம் : கல்லூரி கலையரங்கம்**

திண்டுக்கல், பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 08.03.2024, வெள்ளிக்கிழமை அன்று காலை 11.30 மணியளவில் சர்வதேச மகளிர் தினவிழா கொண்டாடப்பட்டது. **திருநெல்வேலி மாவட்ட துணை ஆட்சியர், திருமதி ஆர்.சௌந்தர்யா** அவர்களும், **சின்னாளப்பட்டி பேரூராட்சித் தலைவர் திருமதி ஆர்.பிரதீபா கனகராஜ்** அவர்களும் இவ்விழாவின் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். **அன்னை தெரசா பல்கலைக்கழக அளவில் நடத்தப்பட்ட கைப்பந்து போட்டியில் முதலிடம் பெற்ற மாணவிகளுக்கு சுழற்கோப்பையும் பதக்கங்களும்** சிறப்பு விருந்தினர்களால் வழங்கப்பட்டன. எம் கல்லூரியின் செயலர், நிர்வாகி, முதல்வர் மற்றும் துணை முதல்வர் ஆகியோர் இவ்விழாவிற்கு முன்னிலை வகித்தனர். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் திருமதி லில்லி புஷ்பம் உமா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பெண்கள் மேம்பாட்டை உணர்த்தும் வகையில் பல்துறை மாணவிகள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர். கணினி அறிவியல் துறைத் தலைவர் முனைவர் குஹபிரியா அவர்கள் நன்றியுரை வழங்கினார். கல்லூரிப்பண் மற்றும் நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

# பான் செக்கர்ஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

மதுரை சாலை, பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல்.

## சர்வதேச மகளிர் தினவிழா 2024

நாள் : 08.03.2024 இடம் : கல்லூரி கலையரங்கம்




